பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2202 கார்த்திகை 01 ஞாயிற்றுக்கிழமை [17-11-1991] UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 348

# எதிர்க்கட்சிகளுடனும் தொண்டா பேசுவார்

## புலிகளின் கடித விவரங்களை பிரேமாவுடன் ஆலோசித்தார்

கொழும்பு, நவம்பர் 17

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அனுப்பிய இரண்டாவது பதில் கடிதம் குறித்தும், அதனால் எழுந்துள்ள புதிய அரசியல் சூழ்நிலை குறித்தும் — எதிர்க்கட்சித் தலைவர்களுடன் தாம் பேசவிருப்பதாக—அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

வி. பு. ம. முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா எழுதிய கடிதத்தின் உள்ளடக்கங்கள் குறித்து தாம் ஏற்கனவே ஜனாதிபதி பிரேமதாசாவுடன் விவரமாகவும், விளக்கமாகவும் கலந்தாலோசனை நடத்திவிட்டதாகவும் அமைச்சர் சொன்னார்.

திரு. மகேந்திரராசா அனுப்பிய கடிதம் அமைச்சர் தொண்டமானுக்கு இம்மாதம் ஒன்பதாம் திகதி கிடைத்திருந்தது.

அந்தக் கடிதத்தின் உள்ளடக்கங்கள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர், பதில் கடிதம் கிடைத்ததாக, அமைச்சர் தொண்டமான்,

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் பேச்சு நடத்தச் சென்ற
## செஞ். அதிகாரி திரும்பினார்
## இணக்க நிலை ஏற்பட்டது?

யாழ்ப்பாணம், நவ. 17

ஸ்ரீலங்கா அரசப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்காக கொழும்பு சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதி கிளாடியோவ் பிரான்ஸினி நேற்று யாழ். திரும்பினார்.

★ உணவுக் கப்பல்களை காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வந்து அங்கு பொருள்களை இறக்குவது.

★ தீவுப் பகுதியில் சிக்கியுள்ள மக்களைப் பார்வையிடுவதற்கு செஞ்சிலுவை அதிகாரிகள் அங்கு விஜயம் செய்வது.

★ விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 42 படையினரையும் பார்வையிடுவதற்கு அவர்களது உறவினர்களைக் கொழும்பிலிருந்து அழைத்து வருவது.

ஆகியவை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சி வார நிகழ்வுகளில் ஆர்வத்துடன் மக்கள் திரள்

யாழ்ப்பாணம், நவ. 17

மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக நடைபெற்று வருகின்றன. இவற்றில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஆர்வத்துடன் கலந்துகொள்கிறார்கள்.

இரண்டு நாள் மழையின் போது தடைப்பட்டிருந்த அலங்கார வேலைகளும் மீண்டும் ஆரம்பமாகின. மழையைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருந்த வீதிகளை துப்புரவு செய்தல், பந்தல்களை அமைத்தல், அலங்கார வேலைகள் என்பவற்றில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்ததை நேற்றுக் காணமுடிந்தது.

சங்க காலத்தின் தமிழர்களின் வீரப் பெருவிழாக்கள் நடைபெற்றதற்கு ஒப்பாக மாவீரர் வாரத்தைக் கொண்டாட மக்கள் தயாராகி வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச கடற் பகுதியிலேயே
## இந்தியபடை எம்மை பிடித்தது

### ஈழத்தமிழர் நீதிமன்றில் தெரிவிப்பு

சென்னை, நவ. 17

"இந்தியக் கடல் எல்லைக்கு அப்பால், சர்வதேசக் கடல் பிராந்தியத்தில் வைத்தே இந்தியக் கடற்படை எம்மைப் பிடித்தது."

இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட பத்து ஈழத்தமிழர்கள் இவ்வாறு நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பாண்டிச்சேரி கரைக் கடல் பகுதியில் வைத்து கடந்த எட்டாம் திகதி இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் இந்த பத்து ஈழத் தமிழர்களும் சென்னை ஜோர்ஜ் டவுன் நீதிவான் திருமதி விபத்மினி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

"ஏதாவது கூற விரும்புகிறீர்களா?" — என்று அவர்களைப் பார்த்து நீதிவான் கேட்டபோது அவர்களில் ஒருவரான எஸ். பாலன் என்பவர் பின்வருமாறு கூறினார்.

நாம் இந்தியாவுக்கு எதிராகச் செயற்படவில்லை இந்தியாவின் கடல்பகுதி இந்தியாவின் கரையோரத்தில் இருந்து 60 கடல் மைல்களாகும். ஆனால் நாம் 400 கடல் மைல்களுக்கு அப்பாலேயே பயணம் செய்து கொண்டிருந்தோம்.

சர்வதேச கடலில் பிரயாணம் செய்ய எமக்கு எல்லாவித உரிமைகளும் உண்டு. இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசிக்கும் எண்ணம் எமக்கு இருக்கவில்லை.

எமது நாட்டுக்குத் தேவையான டீசல், பெற்றோல் போன்ற அத்தியாவசியப் பொருள்களையே நாம் எடுத்துச் சென்றோம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப......சர்வதேச கடல் பிராந்தியத்திலையும் கன்கடை ஆதிக்கம் தான் எண்டு நினைச்சுப் போட்டினம் போலை......!

## யாழ். மாவட்ட எம். பிக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ். மாவட்டத்தின் சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு கடிதம் எழுதியுள்ளனர் என்று நேற்றைய கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி இருந்தது.

தாம் நாடாளுமன்றம் வருவதற்கு ஏற்றதாக பிரயாண, தங்குமிட வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தருமாறு அவர்கள் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-த)

## பங்கீட்டு விலைகள்

இன்று முதல் நடைமுறைக்கு வரும் உணவுப் பங்கீட்டுத் திட்டத்தில் பொருள்கள் விற்பனைக்கு கிலோ ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| நாட்டரிசி | — ரூ. 31 |
| மோடா அரிசி | — ரூ. 28 |
| திட்டப் பச்சை | — ரூ. 30 |
| சம்பா அரிசி | — ரூ. 28 |
| வெ. பச்சை அரிசி | — ரூ. 26 |
| சீனி | — ரூ. 36 |
| மா | — ரூ. 23 |
| உழு. பருப்பு | — ரூ. 48 |
| பயறு | — ரூ. 48 |
| கௌபி | — ரூ. 38 |
| மைசூர் பருப்பு | — ரூ. 80 |
| தேயிலை | — ரூ. 180 |

(உ-5)

## வங்காலையில் கண்ணி; ராணுவ வாகனம் சிதறியது

யாழ்ப்பாணம், நவ. 17

மன்னார், வங்காலைப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்று சிக்கி சிதறியது.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர் என்றும், பலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தள்ளாடி முகாமில் இருந்து வங்காலை முகாமுக்கு ரோந்து சென்ற வாகனத் தொடர் அணி மீதே புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை நடத்தினர்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரது சடலங்களையும் காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு, ஏனையோர் தள்ளாடி முகாம் நோக்கி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## லலித் குழுவின் வழக்கு; 3 ஆம் திகதி தீர்ப்பு!

கொழும்பு, நவ. 17

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து தாங்கள் வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து அதிருப்திக் குழு எம். பிக்கள் தாக்கல் செய்திருந்த வழக்கின் மீது எதிர்வரும் டிசம்பர் 3ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும்.

கடந்த புதன்கிழமை வழக்கு விசாரணைகள் முடிவுற்றதை அடுத்து நீதியரசர்கள் தீர்ப்பு வழங்குவதை 3ஆம் திகதி வரை ஒத்தி வைத்தனர்.

உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஜே. எம். எம். பி. குலதுங்க, மார்க் பெர்னாண்டோ, எஸ். டபிள்யூ. பி. வடுகொடபிட்டிய ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

ஐ. தே. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா, ஜி. எம். பிரேமச்சந்திரா, சந்திரா கருணாரத்ன, சமரவீர வீரவன்னி, பிரேமரட்ன குணசேகர, ஜே. வின்சென்ட் பெரேரா, லக்ஷ்மன் செனிவிரத்ன ஆகிய எட்டு எம். பிக்களுமே இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தவர்.

(உ-3-10)

## வேலை நிறுத்தம்: தெற்கில் முஸ்தீபு!

கொழும்பு, நவ. 17

1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் பெரிய வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட பல தொழிற்சங்கங்கள் முஸ்தீபு செய்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாக நேற்று முன்தினம் செய்திகள் வெளியானபோதிலும் —

நேற்றும் 9ஆவது நாளாக டாக்டர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்தது.

போனஸ் தரவேண்டும் எனக் கோரி 'லேக் ஹவுஸ்' பத்திரிகை நிறுவன ஊழியர்கள் கடந்த வாரம் மேற்கொண்ட வேலைநிறுத்தம் நிர்வாகத்தின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது.

எனினும் போனஸ் பிரச்சினை தாம் எதிர்பார்த்தபடி தீர்த்துவைக்கப்படவில்லை என்று தெரிவித்து நாளைமுதல் மீண்டும் அவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

இலங்கை காப்புறுதிக் கூட்

(4 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவில் பரவலாக தேர்தல் வன்முறைகள்

### பீஹாரில் மோதல் சம்பவங்கள்

புதுடில்லி, நவ. 17

இந்தியாவில் 14 மாநிலங்களில் நேற்று இடம்பெற்ற இடைத் தேர்தல்களில் பரவலாக வன்செயல் சம்பவங்கள் இடம் பெற்றன.

பீஹாரில் பல இடங்களில் மோதல்கள் இடம்பெற்றன.

பதினைந்து நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், 56 சட்டசபைத் தொகுதிகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்றன.

பீஹாரில் பரவலாக இடம்பெற்ற மோதல்களில் அறுவர் உயிரிழந்தனர்.

அங்கு வாக்குப் பெட்டிகளைப் பறிக்கச் சென்ற கும்பல் ஒன்றின் மீது பொலீஸார் சுட்டதில் மற்றொருவர் உயிரிழந்தார்.

கல்வீச்சுச் சம்பவம் ஒன்றில் 12 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவர் கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

உத்தரப் பிரதேசத்திலும் கல்வீச்சில் 20 பேர் காயமடைந்தனர்.

மத்தியப் பிரதேசத்திலும் பரவலாக வன்முறைகள் இடம்பெற்றன. (உ-3)

## பங்கீட்டு உணவு விநியோகம் தனியார் வர்த்தகர்களிடம்!

### இன்று முதல் அடுத்த இரண்டு வாரங்களுக்கு

யாழ்ப்பாணம், நவ. 17

புதிய பங்கீட்டு உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ளும் தனியார் வர்த்தகர்களுக்கும் இன்று (ஞாயிறு) [illegible] வழங்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக கடந்த சில வாரங்களாக சில பொருள்களை விற்பது தொடர்பாகத் தனியார் விற்பனை நிலையங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது, செயலகத் திட்டப் பணிப்பாளர் இதனை உத்தியோக பூர்வமாக அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன சமேமாறிமறி ஆட்டுக்குட்டி விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்றர், 19, மருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(18810)

## தேவை

பியூட்டரி வாங்கு, மேசையுடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: கிரோ கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி 0795]

## மணமகள் தேவை

29 வயது சிவில் என்ஜினியருக்கும், 31 வயது வங்கி உத்தியோகத்தருக்கும், 32 வயது சைவ தொழில் நுட்ப வியலாளருக்கும் தகுந்த மணமகள் தேவை. தொடர்பு: 249 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(4189)

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூட்டர், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

[இ-0798]

## இடமாற்றம்

திருகத்தில் வார்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய 'பாக்கியம் குழந்தைகள்' வைத்திய சாலை தற்காலிகமாக கல்வியங்காட்டில் இருந்து ஒருமைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தி, குமரபுரம் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது நிர்வாகம்.

[18700]

வேலணை வைத்தியர் இ. இராசரத்தினம் 121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் சிகிச்சையைத் தொடர்கிறார். சகல நோயாளர்களும் வழமைபோல் சிகிச்சை பெறலாம். இடம் பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும்.

(18590)

## கோழி முட்டை

கோழி முட்டை நியாய விலையில் விநியோகம் செய்யப்படும். முட்டைகள் வழங்குவோருக்கு சலுகை விலையில் கோழித்தீன விற்பனை செய்யப்படும். யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி திருநெல்வேலி கிழக்கு. சமாதிலசேகரன் நினைவுக் கட்டடம், மீசாலை வடக்கு.

(சி/0901)

## ஜயந்தி விழா

சுவாமி பிரேமானந்தா ஜியின் 40 ஆவது ஜயந்தி விழா இன்று ஞாயிறு (17 - 11 - 91) காலை 9 மணி முதல் 4 மணி வரை உடுவில் கிழக்கு, கடவுள் சுவாமியின் சந்நிதியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

(18760)

## செவ்வாய் மாற்றம்

20 - 11 - 91 விருச்சிகத்திற்கும் 31 - 12 - 91 தனுவிற்கும் செவ்வாய் மாற்றமடைவதாலும், சனி, குரு யோக சஞ்சாரங்களாலும், யுத்தநிறுத்தம் ஏற்பட்டு, 1992 சமாதான ஆண்டாக மலரும். செவ்வாய் மாற்றம் ரூ. 7/- சோபிதா, யாழ்ப்பாணம். (Prof. சத்தியதாஸன்)

(18761)

## திருமண சேவை

மேலை நாடுகளில் உயர் பட்டம் பெற்ற பொறியியலாளர், ஆங்கில வைத்தியர்கள், வெளிநாடுகளில் சாதாரண தொழில் புரிவோர் ஆகியோரது ஜாதகங்கள் நூற்றுக் கணக்காக எம்மிடம் உண்டு. தொடர்பு: சு. ஆ. தர்மலிங்கம், 24, புறாடிலேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(18807)

# சந்திரிகா விண்ணப்பம்

கொழும்பு, நவ. 17

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கத்துவம் கோரி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா செய்துள்ள விண்ணப்பத்துக்கு முதன்மையளிக்கப்படும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

(த)


C.C.A.

யாழ்ப்பாணம்

வெலிங்டன் சந்திக்கு அருகாமை

A/L 91

வினா-விடை

புதிய பிரிவு III

ஆரம்பம் 18-11-91

கடந்த 15 வருட வினா-விடை ஆரம்பத்தில் இருந்து நடைபெறும்.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | 1-2 |
| கணக்கியல் | — | 2-3 |
| வர்த்தகம் | — | 12-1 |

ஏனைய பிரிவுகளுக்கு அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

(சி/0794)



# சுயதொழிற் பயிற்சி நெறி

பண்டத்தரிப்பில் திரு அல்போன்சஸ் என்பவர் மாதம் இருபதினாயிரம் ரூபாவிற்கு மேல் சுய தொழில் மூலம் வருமானம் பெறுகின்றார்.

அதேபோல் வருமானம் பெறும் தொழில் புரிய ஏன் நீங்கள் முன்வரலாகாது?

ஏன் தொடர்ந்தும் தெரு நிலையிலிருந்து சேவிலை எதிர்பார்த்து நாம் வாழ வேண்டும்.

வளம் தாராளமாக எமது மண்ணில் உண்டு. மனம் கொண்டு இளைஞர்கள் முன் வந்தால் சீனியில் தன்னிறைவு பெற வசதி உண்டு.

3 மாத காலப் பயிற்சி நெறியில் நீங்கள் தொழில் வல்லுனராகிவிட முடியும்.

மாதம் உணவு, இருப்பிட வசதிகளுடன் 1 000 ரூபா ஊக்குவிப்புப்படியும் எம்மால் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 11 - 1991

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம்,
வண்ணார்பண்ணை,
25, பொன்னப்பா வீதி,
யாழ்ப்பாணம்.

[இ-0897]


ராஜீவ் கொலைச் சம்பவம்:

# சந்தேக நபர்களைத் தேடும் பணி முடிவடைந்து விட்டதாக அறிவிப்பு

கொழும்பு, நவ. 17

குண்டு சாந்தன் மரணமடைந்ததைத் தொடர்ந்து முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான முக்கிய நபர்களைத் தேடும் படலம் முடிவுக்கு வந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சிவராசனும், சுபாவும் பெங்களூரில் வைத்துத் தற்கொலை செய்து கொண்ட பின்னர் விசேட புலனாய்வுக் குழுவினர் தேடிக் கொண்டிருந்த முக்கிய இரு விடுதலைப் புலிகளில் சாந்தனும் ஒருவராவார்.

அருப்புக் கோட்டையைச் சேர்ந்த ரவி என்னும் இளைஞரை கடந்த மாதம் பொலிஸார் கைது செய்தனர்.

விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாணத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட இவர் அண்மையில் தமிழ் நாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்த போதே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்தே தேடும் பணி முடிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)


## புகைப்படப் பிடிப்பாளர் கலந்துரையாடல்

மாவீரர் நாள் சம்பந்தமாக புகைப்படப் பிடிப்பாளர்களின் கலந்துரையாடல் நாளை (18-11-1991) மாலை 4-00 மணிக்கு அருச்சுனா வீதியில் அருச்சுனா செயலகத்தில் நடைபெறும்.

கடந்த மாதம் கலந்து கொண்ட புகைப்படக் கலைஞர்களுடன் கலந்து கொள்ளாத புகைப்படக் கலைஞர்களும் கலந்து கொண்டு மாவீரர் நாளை மேலும் சிறப்பிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி:

பொறுப்பாளர்,

★ அருச்சுனா ★

அருச்சுனா வீதி,
பலாலி வீதி, திருநெல்வேலி. [18813]


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வன்

### குணசேகரம் மகிந்தன்


மலர்வு: 08 - 3 - 1970 உதிர்வு: 04 - 10 - 1991

கண்ணின் மணியாக அண்ணனின் மகனானாய்
எண்ணவில்லை நாங்கள் உந்தன் பேரிழப்பை
மகி என்று உரிமையுடன் உன்னை நாம் அழைக்கவில்லை
ஆனால் உறவுகள் ஒடுக்கப்படினும் எம் உரிமை மறையாது.

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மாமி, மாமா, மச்சான், மச்சாள்மார்.

123 மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்
திருமதி, P. துரைராஜா.
[18762]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 03 — 04 — 1969

விண்ணில்: 17 — 11 — 1988

### சோ. சங்கரப்பிள்ளை சத்தியதேவன்

திதி: 17 — 11 — 1991

அன்பு மகனே! நீ மறைந்து ஆண்டுகள் மூன்று சென்றாலும் கண்ணில் நீர் வற்றவில்லை. காலமெல்லாம் அழுதாலும் கவலையோ தீரவில்லை. அப்பன் உடன் பிறப்பை உறுதியுடன் காப்பேன் - என்றாய் பிறநாடு சென்று பேதலித்து வந்தாய் பட்டகடன் எங்கே, பாங்கான நினைவெங்கே, பெற்ற கடன் தீர்க்கும் பெருமகனின் நினைவெங்கே - மகனே! எங்களை ஆறாத்துயரில் நிதம் அழுந்தக் கலக்கிவிட்டு மீளாத்துயில் கொண்டாய், நிலை மாறாச் சூரியன் உதிக்க மறந்தாலும் உன் நினைவை என்றும் மறவோம்.

உத்தமனே உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, சகோதரர்,
[illegible]

(18758)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் தண்டனை பெற்ற இரு ஈழ கைதிகள் தப்பினர்

சென்னை, நவ. 17

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனை அறிவிக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த இருவர் உட்பட எண்மர் வேலூர் சிறையில் இருந்து நேற்று முன்தினம் மாலை தப்பிச் சென்றுவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஓடுகளை அகற்றிவிட்டு இவர்கள் தப்பிச் சென்றனர்.

இவர்கள் தப்பிய செய்தி அறிவிக்கப்பட்டவுடன் சிறைச்சாலைகளுக்கான இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவசரமாக வேலூர் வந்து விசாரணைகளை ஆரம்பித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ)


## பண்டத்தரிப்பு பரிஷ் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்

## பதவி வெற்றிடங்கள்

மேற்படி சங்கத்தில் கீழ்க்காட்டப்பட்ட பதவி வெற்றிடங்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும், தலைவர் / பதில் பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், சில்லாலை வதி பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு 30-11-1991க்குப் பிந்தாமல் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

### பதவி: பொதுமுகாமையாளர் - 101:06

சம்பள அளவுத்திட்டம்:

1305 — 60 x 4, 75 x 11 — 2370/-
[இதர படிகளும் வழங்கப்படும்]

தகைமை:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான 3 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டம் அல்லது இதற்கிணையான தகைமை.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் [உயர்தரம்] / க. பொ. த. [உயர்தரம்] இல் 3 பாடத்திலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 6 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:

21க்கும் — 40க்கும் உட்பட்டவர்கள்.

### பதவி: கணக்காளர் - 104:07

சம்பள அளவுத்திட்டம்:

1165 — 60 x 3 75 x 11 — 2170/-
[இதர படிகளும் வழங்கப்படும்]

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியிலான 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த (உயர்தரம்) இல் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 06 வருடத்துக்குக் குறையாத அனுபவமும்.

வயது:

21க்கும் — 40க்கும் உட்பட்டவர்கள்.

### பதவி: உற்பத்தி முகாமையாளர்-106;07

சம்பள அளவுத்திட்டம்:

1105 — 60 x 4 75 x 11 — 2170/-
[இதர படிகளும் வழங்கப்படும்]

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்திலுள்ள பதவியில் 3 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்டத்திலுள்ள பதவியில் 4 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது

(இ) க. பொ. த. [உயர்தரம்] இரசாயனவியலில் திறமைச்சித்தி உட்பட 3 பாடங்களில் சித்தியும், கள்ளுூர் மூலவளஉற்பத்தித் தொழிலில் 2 வருடத்துக்குக் குறையாத அனுபவமும், பனை, தென்னை மூலவள உற்பத்தித் துறையில் பெற்றுள்ள அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

வயதெல்லை:

21க்கும் — 40க்கும் உட்பட்டவர்கள்.

கூ. சேவையிலுள்ள
தலைவர்/பதில் பொதுமுகாமையாளர்.

பண். பரிஷ்
தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்: [இ-0800]

# உதயன்

## உதவி கிடைப்பதை உறுதி செய்க!

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள பட்டினி நிலையைப் போக்கி, உணவு விநியோகத்தைச் சீர் செய்வது சம்பந்தமாக ஆராய்வதற்கான மாநாடு ஒன்று கடல் கடந்து கனடாவில் நடக்க இருக்கிறது!

தமிழ்ப் பகுதிகளின் உணவு நெருக்கடியை நீக்குவதற் கென்று இப்பகுதிகளிலும், கொழும்பிலும் நடக்கும், நடந்த மாநாடுகள், கூட்டங்கள் எதுவும் உரிய பலனைத் தரவில்லை அதனால் ஈழத் தமிழர் வயிற்றுப் பசி போக்குவதற்கு வெளிநாடு ஒன்றில் கூடி ஆராய வேண்டிய தேவையும், அவசியமும் உருவாகி உள்ளன!!

ஈழத் தமிழர்களை, ஸ்ரீலங்கா அரசாங்கம் பட்டினி போடும் கொடுமையில் ஈடுபட்டிருக்கிறது என்பது உலகத்துக்குப் புரிந்திருக்கிறது. கனடாவில் நடக்கவிருக்கும் மாநாடு அந்த உண்மையையே புலப்படுத்துகிறது.

கனடா மாநாட்டிற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் அழைக்கப்படுவர் எனக் கூறப்படுகிறது. மாநாட்டில் கலந்து கொள்ளும் அரச பிரதிநிதி, தாங்கள் தமிழர்களைப் பட்டினி போடவில்லை என்று வாதாடவும், அதற்கான பொய்யான தகவல்களையும், தரவுகளையும் முன்வைக்கவுமே செய்வார். வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளை அல்லது அதிகாரிகளை அதனை நம்ப வைக்கவும், அதன் மூலம் தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதைத் தடுக்கவும் சகல வழிகளாலும் முயற்சிப்பர்.

எனவே, இம்மாநாட்டில் தமிழர் தரப்பில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள், அரசாங்கப் பிரதிநிதி முன் வைக்கும் பொய்யான புள்ளி விவரங்கள், தகவல்கள், வாதங்களை வெட்டி வென்று உண்மை நிலையை வெளிநாட்டவருக்கு உறுதி செய்யக் கூடியதாக சகல ஆதாரங்களுடனும் ஆயத்தமாகச் செல்ல வேண்டும்.

தமிழர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கத்தின் அனுசரணை தேவை எனக் கருதியே மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அரசாங்கப் பிரதிநிதியையும் அழைத்திருக்கிறார்கள் என ஊகிக்கலாம்.

தமிழர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்குங்கள், நிவாரணம் வழங்குங்கள் என்று மாநாடு அரசை எவ்வாறு வலியுறுத்தினாலும் எதுவும் நடக்காது. மாநாட்டில் சம்மதம் தெரிவித்துவிட்டு இங்கு வந்து "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற நிலைப்பாட்டைத் தான் அரசு கடைப்பிடிக்கும்.

எனவே தமிழர்களின் பட்டினி நிலை தவிர்க்கப்பட வேண்டுமெனில், மாநாட்டை கூட்டுவதில் அக்கறை எடுத்த அமைப்பாளர்கள், நிவாரணம், போதிய உணவு தமிழ் மக்களின் கைக்கு வந்து சேர்வதைத் தாங்களே உறுதி செய்து கொள்வது அவசியம்.

ஆகையால் போதிய உணவுப் பொருள்கள், ஈழத்தமிழர்களின் கைக்குக் கிடைப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தே மாநாட்டில் பிரதானமாக ஆராய வேண்டும். தமிழர்களுக்கு உதவ விரும்பும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களோ அல்லது அமைப்புகளோ தமது உதவியை அரசாங்கத்தின் ஊடாக வழங்குவதற்கு நினைத்தும் பார்க்கலாகாது.

எரிட்ரியா நாட்டு சிறுபான்மையினருக்கு உலக நாடுகள் உணவு அனுப்ப முன்வந்த போது, அந்த நாட்டு அரசாங்கம் அதனை எவ்வாறு தடுத்தது என்பதை மாநாட்டு அமைப்பாளர்கள் நிச்சயம் அறிந்திருப்பர்.

ஆகவே கனடா மாநாடு இதுவிடயத்தில் மிக்க கவனமாகவும், தந்திரோபாயத்துடனும், முன் யோசனையுடனும் நடந்து கொள்வது அவசியம்.

## தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம் மேற்கொள்வதில்லை என்று முடிவு

கொழும்பு நவ. 17

எதிர்வரும் புதன்கிழமை மேற்கொள்ள இருந்த அடையாள வேலைநிறுத்தத்தைக் கைவிடுவது என்று பெருந்தோட்ட தொழில் துறை தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு முடிவு செய்திருக்கிறது.

பெருந்தோட்ட தொழில்துறை, மறுசீரமைப்பு குழுவுக்குத் தலைமை வகிக்கும் நிதி அமைச்சின் செயலாளர் திரு ஆர். பாஸ்கரலிங்கத்துக்கும், தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து இவ்வாறு முடிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

(உ-த)

## இவர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில்

யாழ்ப்பாணம், நவ. 17

இன்று முதல் பங்கீட்டு உணவுப் பொருள்கள் தனியார் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட இருப்பதால், தருமப் பணம் பெறுவோர் உணவுப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு வாங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

(அ-5)

## மழையால் தமிழகத்தில் 28 பேர் பலி!

புதுடில்லி. நவ. 17

கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழை காரணமாக தமிழ்நாட்டில் இதுவரை 28 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்.

வங்கக் கடலில் உருவான புயல் சின்னம் வலுவடைந்து நேற்றுக் காலை வேலூருக்கு அருகில் நிலைகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-இ]

## ஏற்புவலியால் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம். நவம்பர் 17

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஏற்பு வலியால் ஒருவர் பலியானார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் (வயது 49) என்பவரே மரணமானவராவார்.

கடந்த மாதம் வெள்ளத்தில் தடுக்கி விழுந்த போது ஏற்பட்ட சிறிய காயத்துக்கு உரிய மருத்துவ சிகிச்சை செய்யாததாலேயே இவர் ஏற்புவலிக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

[உ 15]

## பகுதிநேர டிப்புளோமா பயிற்சி; இம்முறை 100 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பகுதிநேர பயிற்சி நெறிக்கு இம்முறை 35 பேர் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இந்தத் தடவை 100 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பயிற்சி நெறி ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது — என்றார் அவர்.

(ஓ-3)

## முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம். நவ 17

மாவீரர் நாளை ஒட்டி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி நடத்தும் இலக்கியப் போட்டிகளின் முடிவுத் திகதி நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(த)

## சீனப் பிரதமர் இந்தியா விஜயம்

பெய்ஜிங். நவ. 17

சீனப் பிரதமர் லீ பெங் அடுத்த மாதம் 11 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக பெய்ஜிங்கிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

1962 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய சீன யுத்தத்தின் பின் இந்தியாவுக்கு வருகை தரும் முதலாவது சீனப் பிரதமர் லீ பெங் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்குமிடையிலான எல்லைத் தகராறு பற்றி சீனப் பிரதமர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-10)

## கனக செந்திநாதன் நினைவு தினம்

யாழ்ப்பாணம், நவ. 17

இரசிகமணி கனக செந்திநாதனின் பதினான்காவது நினைவு தின நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

"கலை இலக்கியத் துறையில் இன்றைய எதிர்பார்ப்புகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கும் இடம் பெறும்.

(த)

## பரிசளிப்பு விழா

கொழும்புத்துறை, நவ. 17

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாசத்தினால் நடத்தப்பட்ட சன சமூகங்களுக்கிடையிலான கலை, கலாசார விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் வைபவம் இன்று [illegible] இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

(த-80)

வடக்கு-கிழக்கில்

## தேர்தலுக்குரிய சூழ்நிலை உருவாக்குவதே முதற் பணி

### புதிய தளபதி சிசில் கூறுகிறார்

கொழும்பு, நவ. 17

வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதே எனது முதலாவது பிரதான கடமையாக இருக்கும்.

நேற்று முன்தினம் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கொழும்புப் பத்திரிகைச் செய்தியாளரிடம் புதிய தளபதி இவ்வாறு கூறியதாக அந்தப் பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது.

மேலும், கூட்டுப்படைத் தலைமைப் பதவியை முன்னாள் இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா நாளை திங்கட்கிழமையன்று பொறுப்பேற்பார் எனவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை — இம்மாதத் தொடக்கத்தில் கடற்படையின் புதிய தளபதியாகப் பொறுப்பேற்ற கிளென்சி பெர்னாண்டோ ரியர் அட்மிரல் தரத்திலிருந்து வைஸ் அட்மிரல் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார். வைஸ் அட்மிரல் தரத்திற்கு உயர்த்தப்படும் முதலாவது கடற்படைத் தளபதி இவரேயாவர்.

தற்போதைய யுத்தத்தில் இவர் எடுத்த திறமையான நடவடிக்கைகளுக்காக இந்த தரமுயர்வு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சி நீங்கிய பின்னர் பதவி ஏற்றுள்ள பதினோராவது கடற்படைத் தளபதி கிளென்சி பெர்னாண்டோ ஆவார்.

(அ-10)

## வடக்கு - கிழக்கு யுத்தம் முடிந்தால் ஐந்நூறு ரூபா சம்பள உயர்வு வழங்கலாம்

### அமைச்சர் அதிகாரி சபையில் தகவல்

வடக்கு-கிழக்கு யுத்தம்முடிவுக்கு வந்தால் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 500 ரூபா சம்பள உயர்வு கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

தபால், தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு. ஏ. எம். எஸ். அதிகாரி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்காகவும், ஜே. வி. பி யை அடக்குவதற்காகவும் நாம் பெருந் தொகைப் பணத்தை செலவிட்டதன் காரணமாகவே இன்று வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை அதிகரித்தது என்றும் அவர் சொன்னார்.

(த)

## கைதான 10 ஈழத் தமிழரில் அனேகர் வல்வை வாசிகள்

சென்னை, நவ 17

காரைக்கால் கடற்பகுதியில் ஆயுதங்கள் அடங்கிய கப்பலுடன் பிடிபட்டதாகக் கூறப்படும் பத்து பேரில் அனேகர் வடமராட்சியையும், கொக்குவிலையும் சேர்ந்தவர்கள் என்று 'இந்து' பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் பலர் இலங்கையில் இருந்து தாய்லாந்து தலைநகருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பிரஸ்தாப கப்பலில் ஏற்றப்பட்டவர்கள் என்றும்—

வழமையாக இக்கப்பல் சர்வதேச கடலில் நங்கூரமிட்டிருக்கும் என்றும் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கப்பலில் இருந்த ஆயுதங்களில் பெரும்பாலானவை பாங்கொக்கிலும், சிங்கப்பூரிலும் வாங்கப்பட்டவை எனவும் 'இந்து' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

## வடமராட்சியில் மழையால் இரண்டு பேர் உயிரிழப்பு!

வடமராட்சி, நவ. 17

வடமராட்சிப் பகுதியில் கடந்த புதன், வியாழக்கிழமைகளில் பெய்த மழை, கடும் காற்று காரணமாக அங்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

உடுப்பிட்டி, இமையாணன் கிழக்குப் பகுதியில் பனை மரம் விழுந்து வீடு ஒன்று இடிந்தது அந்த சமயம் வீட்டின் குசினிக்குள் இருந்த மூன்று வயது பெண் குழந்தை கதவுகளுக்கு கீழ் நெரிந்து அவ்விடத்திலேயே மரணமானது.

குழந்தையின் தாய் தெய்வேந்திரம் ராணி (30 வயது) இடிபாடுகளுக்குள் அகப்பட்டு, காயங்களுடன் தப்பிவிட்டார்;

துன்னாலை கோவில் சந்தைப் பகுதியில் மரம் ஒன்று முறிந்து மின் கம்பத்தில் விழுந்த போது, அந்தக் கம்பம் விழுந்து சென்று ஒருவர் மீது விழுந்து விட்டது. அந்த நபரும் சம்பவ இடத்தில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. அவரது பெயர், விவரம் தெரியவரவில்லை.

வடமராட்சிப் பகுதியில் ஆங்காங்கே பல வீடுகள், கட்டடங்கள் மரங்கள் விழுந்தும் கடும் காற்று காரணமாகவும் பெரும் சேதமடைந்துள்ளன;

பெரும் எண்ணிக்கையான பயன்தரு மரங்கள் அழிந்து விட்டன.

(ஓ 165-15)

## கடும் மழை, காற்றினால் குடாநாடு பெரும் பாதிப்பு

கடந்த புதன், வியாழக்கிழமைகளில் பெய்த கடும் மழை, பலத்த காற்று காரணமாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாக ஆங்காங்கே இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல பகுதிகளிலும் வீடுகள், கடைகள், மற்றும் ஆலயங்கள் சேதமடைந்திருப்பதாகவும் — பெரும் எண்ணிக்கையான மரங்கள் முறிந்தும், [illegible] விழுந்துள்ளதாகவும் எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

வெள்ளத்தினால் பயிர்கள் மூடப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். உடுவில், இணுவில், மருதனார்மடம், சுன்னாகம் மற்றும் பகுதிகளில் வெங்காயப் பயிர் பாதிப்புற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில பகுதிகளில் கால்நடைகள் வெள்ளத்தினால் அள்ளுண்டு சென்றுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

(ஒ-117-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பங்கீட்டு அட்டவணை

யாழ்ப்பாணம், நவ. 17

இன்று முதல் அமுலுக்கு வரும் உலர் உணவுப் பொருள்களுக்கான புதிய பங்கீட்டுத் திட்டத்தில் கடந்த 2 கட்டங்கள் வழங்கப்பட்ட அளவுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சில பொருள்களின் அளவு குறைக்கப்பட்டுள்ளது; அதேவேளை புதிதாக 6 முதல் 8 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு வெவ்வேறு அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

புதிய பங்கீட்டு அட்டவணை வருமாறு:-

| பொருள் | 1 அங்க | 2 அங்க. | 3 அங்க. | 4 அங்க. | 5 அங்க. | 6 அங்க. | 7 அங்க. | 8 அங்க. |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி | 1½ கிலோ | 3 கிலோ | 4 கிலோ | 5 கிலோ | 6 கிலோ | 7 கிலோ | 8 கிலோ | 9 கிலோ |
| மா | 1½ „ | 3 „ | 4 „ | 5 „ | 6 „ | 7 „ | 8 „ | 9 „ |
| சீனி | ½ „ | ½ „ | ¾ „ | 1 „ | 1¼ „ | 1½ „ | 1¾ „ | 2 „ |
| பருப்பு வகை | ½ „ | 1 „ | 1 „ | 1½ „ | 2 „ | 2 „ | 2 „ | 2 „ |
| தேயிலை / கோப்பி | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் | 100கிராம் |
| பால்மா | 1 பக். | 1 பக். | 1 பக். | 1 பக். | 1 பக். | 1 பக். | 1 பக். | 1 பக். |

## கடமைக்கு வரப் பணிப்பு

தீவுப்பகுதியின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், மன்னார் உதவி அரச அதிபர் பிரிவு, வவுனியா மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆகியவற்றில் பணிபுரியும் அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள் நாளை 18ஆம் திகதி (அல்லது அதற்கு முன்னர்) கடமைக்கு திரும்ப வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறு கடமைக்குச் சமுகமளிக்காதவர்கள் தமது பதவிகளை விட்டு விலகியவர்களாகக் கருதப்படுவர் என்று பொதுநிர்வாக அமைச்சு சுற்று நிருபம் மூலம் தெரிவித்திருக்கிறது. (அ-ச)

## பஞ்சாப்பில் நிலக்கண்ணி நால்வர் பலி

பஞ்சாப் மாவட்டம் ஹார் திப்பாவில், வீதியில் வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடி ஒன்று வெடித்ததில் மத்திய ரிசர்வ் படையைச் சேர்ந்த 3 பொலீஸாரும், அவர்கள் சென்ற வண்டியின் சாரதியும் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### Rev. நாகநாதர் கதிரவேலு

Rev. நாகநாதர் கதிரவேலு காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற விக்ரோறியா நல்லம்மாவின் அன்புக் கணவரும், தங்கராணி, நிர்மலானந்தன் ஆகியோரின் தந்தையாரும், ஆர். ஜே. குணரத்தினம் (சிமாகிஸ் இன்டஸ்றீஸ்), மோகாம்பிகை ஆகியோரின் மாமனாரும், கிறிஷ்சாந்தி (U. K.), றேஷன் (U. K.), நிரஞ்சன் (U. K.) ஷமிலி, சஞ்சிற், சஜீவ ஆகியோரின் பேரனும், பிரவீன், பிறேமன், மேனகா ஆகியோரின் பூட்டனும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 17-11-91 பிற்பகல் 2-00 மணிக்கு 52/2, கண்டி வீதி, சுண்டுக்குளி இல்லத்தில் (ஆஸ்பத்திரி வீதி—கண்டி வீதிச் சந்தி) நடைபெற்று, பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
நிர்மலானந்தன் குடும்பத்தினர்

(C/0904)

### சின்னத்தம்பு சிவசுப்பிரமணியம் (எட்டர்)

திரு. சின்னத்தம்பு சிவசுப்பிரமணியம் (எட்டர்) காலமானார்.

இவர் கரும்பனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சின்னத்தம்புவினதும், திருமதி சி. வள்ளிப்பிள்ளையினதும் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை தம்பதிகளின் இளைய மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், சிவசுதன், சிவசுகி, சிவகரன் ஆகியோரது அன்புத்தந்தையுமாவார். அன்னாரது ஈமக்கிரியை 17-11-91 அன்று பி. ப. 2 மணியளவில் சுழிபுரம் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி பு. சிவசுப்பிரமணியம்

(18765)

### திருமதி சின்னம்மா நாகரெத்தினம்

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நாயன்மார்கட்டு அமரர் திரு. இராமலிங்கம் நாகரெத்தினம் (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்புப் பாரியாருமாகிய சின்னம்மா நாகரெத்தினம் நேற்று 16-11-1991 காலை 2-30 மணியளவில் சிவபதமடைந்தார். அன்னார் திருமதி நாகேஸ்வரி வேலுப்பிள்ளை, டாக்டர் நாகேஸ்வரன் நாகரெத்தினம், திருமதி பரமேஸ்வரி இராசேந்திரா, திரு. பரமேஸ்வரன் நாகரெத்தினம், காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. க. வேலுப்பிள்ளை, திருமதி இராசேஸ்வரி, நா. நாகரெத்தினம், காலஞ்சென்ற திரு. துரைசுவாமி இராசேந்திரா, திருமதி லேஜினி, ப. நாகரெத்தினம், டாக்டர் வி. எல். பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் நேற்று 16-11-1991 சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சே. நேசரெத்தினம்

(18763)

### திருமதி நாகரத்தினம் வேலாயுதபிள்ளை

காலஞ்சென்ற திருமதி நாகரத்தினம் வேலாயுதபிள்ளை அவர்களின் ஈமக்கிரியைகள் இன்று 319, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
டாக்டர் வி. குகதாசன் (மருமகன்)

(18766)

## கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'லிக்வி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்குவது தடைப்பட்டுள்ளது.

கடந்த புதன், வியாழனில் மழையுடன் வீசிய கடும் காற்றினால் அந்தக் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் சில கருவிகள் பழுதடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் ஒருவாறு குறைந்தளவு பொருள்கள் நேற்று இறக்கப்பட்டன.

எனினும் அக்கருவிகள் தொடர்ந்து சிக்கல் தருவதால் அதை திருத்தும் வேலைகள் கப்பலில் உள்ள தொழில் நுட்பவியலாளர்களால் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. திருத்தும் முயற்சி வெற்றியளிக்காவிட்டால், கப்பல் இன்று திருமலை திரும்பும் என்றும்—

அங்கு திருத்த வேலைகள் முடிவடைந்த பின்னரே கப்பல் பருத்தித்துறைக்குத் திரும்பி வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-3 16]

## செஞ். அதிகாரி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகவும்—

இந்த விவகாரங்களில் இணக்கமான சூழ்நிலை ஏற்பட்டதாகவும் சில செய்திகள் தெரிவித்தன.

தனது கொழும்பு விஜயத்தின் முடிவுகள் குறித்து திரு. கிளாடியோ வ் விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு நேற்று மாலை எடுத்துரைத்ததாகவும் அறிய வந்தது [உ-3]

## எதிர்க்கட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் திரு. மகேந்திரராசாவுக்கு அறிவித்துவிட்டார்.

### விரைவில் தொடரும்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சரியான சூழ்நிலை தோன்றியிருப்பதாக நான் கருதுகிறேன். இப்போது நடந்து கொண்டிருப்பது கலந்தாலோசிக்கும் கட்டமாகும். பேச்சுவார்த்தை நடத்தும் கட்டம் விரைவில் தொடரும்—

இலங்கை முன்னேற்றம் அடைவதற்கு முன்னர் இனப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதே எனது கருத்து. பிரதமர் தமது பட்ஜெட் உரையில் சமாதானத்தை நிலைநாட்டக் கோரியது வரவேற்கத்தக்கதாகும்—

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்ற அவசரத்தை மக்கள் உணர்வதற்கு, அரசாங்கம் புதிதாக விதித்துள்ள பாதுகாப்புத் தீர்வை உதவும் என்று நம்புகிறேன்— என்று அமைச்சர் தொண்டமான் கூறியதாக அரசு சார்பு பத்திரிகையான "டெய்லி நியூஸ்" தெரிவித்திருக்கிறது. [அ-3]

## சர்வதேச,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் 2 கோடி ரூபா பெறுமதி வாய்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பல் ராடர்களையும், செய்மதி மூலமான சிக்னல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தொலைத் தொடர்பு கருவிகளையும் கொண்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-இ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 [illegible]

## பர்மிய எதிர்க்கட்சித் தலைவியை விடுவிக்க 5 நாடுகள் வேண்டுகோள்

மணிலா, நவ. 17

நோபல் சமாதானப் பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக சிறையில் இருக்கும் பர்மிய எதிர்க்கட்சித் தலைவி அவுங் சென் சுகியை விடுதலை செய்யுமாறு பர்மிய இராணுவ அரசிடம் ஐந்து நாடுகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

அமெரிக்கா, நோர்வே சுவீடன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியவையே அந்த ஐந்து நாடுகளாகும்.

அடுத்த மாதம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நோபல் சமாதானப் பரிசளிப்பு வைபவம் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

சமாதானப் பரிசு பெற்ற அவுங் சென் சுகி கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை விடுவிக்க பர்மிய இராணுவ அரசு நிபந்தனை ஒன்றை விதித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்டால் உடனே பர்மாவை விட்டு வெளியேறுவதாகவும்—

அரசியலில் மீண்டும் பிரவேசிப்பதில்லை என்றும் அவர் பிரகடனம் செய்ய வேண்டும் என்றுமே இராணுவ அரசு நிபந்தனை விதித்திருக்கிறது. [உ-10]

## பங்கீட்டு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

புதிய பங்கீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை இரண்டு கட்டங்களாக ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த உலர் உணவு விநியோகத்தின் அடுத்த இரு கட்டங்களையும் விநியோகிக்கும் பொறுப்பு தனியார் வர்த்தகர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 21ஆம் திகதி நிலவிய (நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு) விலையின் அடிப்படையில்—குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப — உலர் உணவு அட்டைகளுக்கு இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

'அ', 'உ' அட்டை வைத்திருக்கும் குடும்பங்கள் தாம் விரும்பிய எந்த வர்த்தக நிலையத்திலும் தமக்குரிய உணவுப் பொருள்களை முழுவதுமாகவோ, பகுதி பகுதியாகவோ கொள்வனவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களது உலர் உணவு அட்டைகளுடன் விசேடமாக இணைக்கப்படும் அட்டவணைப் பட்டியல் ஒன்றில் கொள்வனவு செய்யும் உலர் உணவுப் பொருளின் அளவு விபரங்களை விற்பனையாளர் பதிவு செய்துவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது

கொள்வனவு செய்வோர் தாம் விரும்பும் உலர் உணவுப் பொருள்களில் ஒன்றை ஒரு வர்த்தக நிலையத்திலும் இன்னொரு பொருளை அல்லது அப் பொருளின் பிறிதொரு பகுதியை இன்னொரு வர்த்தக நிலையத்திலும் கொள்வனவு செய்ய முடியும்.

இப் புதிய திட்டம் குறித்து நேற்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தக சங்கங்களுக்கும் யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் செயலகம் அவர்களுக்கு உணவுப் பொருள் எதையும் இப்போதைக்கு வழங்காது. கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருப்பில் உள்ள பொருள்களை விற்பனை [illegible] (அ-5)

## சங்கீத ஆலோசகருக்கு கலந்துரையாடல்

சங்கீத பாட சேவைக் காலப் பயிற்சி ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை நல்லூர் சாதனா இ. இ. தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இக்கலந்துரையாடலுக்கு சங்கீதக் கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமை வகிப்பார். [அ]

## வேலை நிறுத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுத்தாபனத்தின் ஊழியர்களும் தற்போது 'டேவிஸ்' கோரி பகல் உணவு இடைவேளையின்போது "பிக்கெட்டிங்" (ஆர்ப்பாட்டம்) செய்து வருகிறார்கள். இது வேலை நிறுத்தமாகவும் மாறக்கூடும்.

வங்கி ஊழியர்களும் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்ய இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. (உ-10)

## எழுச்சி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கின்றனர்.

வீதிகள் எங்கும் ஒரே "ந்தல்களும், அலங்காரங்களுமாக நிறைந்து காணப்படுகின்றன; பல இடங்களில் கண்ணையும் கருத்தையும் கவரும் அலங்கார வளைவுகள் நிறுவப்படுகின்றன.

தங்களின் அலங்காரமே சிறந்தது என்று கூறிப் போட்டி போட்டுக் கொண்டு மக்கள் மாவீரர் வாரத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

எழுச்சி வாரத்தை ஒட்டி கிராம மட்டத்தில் அஞ்சலிக் கூட்டங்களும், பிரதேச மட்டத்தில் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன; (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org